செ.வெ.எண் : 03/செப்டம்பர் நாள்: 03.09.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள பொதுப்பணித்துறை கண்மாய்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கீழுள்ள ஊரணிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிமராமத்து புனரமைப்புப் பணிகள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் குடிமராமத்து திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் பொதுப்பணித்துறையின் கீழ் உள்ள கண்மாய்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் உள்ள ஊரணிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.09.2019) நேரடியாக சென்று ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிலத்தடி நீர் அளவினை மேம்படுத்தும் வகையிலும், மழை நீரை வீணாக்காமல் சேமிக்க ஏதுவாகவும் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் குடிமராமத்து திட்டப் பணிகளின் கீழ் கண்மாய் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.37.59 கோடி மதிப்பில் 69 பொதுப்பணித்துறை கண்மாய்களில் அந்தந்த விவசாய பாசனதாரர் நலச்சங்கங்களின் மூலம் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக ஊராட்சி அளவில் உள்ள 224 சிறுபாசன கண்மாய்கள், 988 ஊரணிகளில் தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கப் பணிகள் திட்டத்தின் கீழ் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு சிறு பாசன கண்மாய்க்கும் தலா ரூ. 5 இலட்சம் மதிப்பிலும், ஊரணிகள் தலா ரூ.1 இலட்சம் மதிப்பிலும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு ரூ. 21.8 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில், திருவாடானை வட்டத்திற்குட்பட்டு பொதுப்பணித்துறையின் கீழ் வட்டாணம் கண்மாயில் ரூ.83 இலட்சம் மதிப்பிலும், பனஞ்சாவயல் கண்மாயில் ரூ.88.50 இலட்சம் மதிப்பிலும், நாவலூர் கண்மாயில் ரூ.36 இலட்சம் மதிப்பிலும், தானியன்பீர் கண்மாயில் ரூ.35 இலட்சம் மதிப்பிலும் குடிமராமத்து திட்டத்தின் கீழ் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோல, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் திருவாடானை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொடிப்பங்கு ஊராட்சியில் மண்மலக்கரை மற்றும் சிறுதவயல் கொங்குரான் ஊரணிகளிலும், வட்டாணம் ஊராட்சியில் நந்தியான்போட்டை கல்லூரணியிலும் தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கப் பணிகள் திட்டத்தின் கீழ் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள கிராமங்களுக்கு இன்றைய தினம் (03.09.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரிடையாகச் சென்று குடிமராமத்து திட்டப் பணிகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.எஸ்.கார்த்திகேயன், உதவி பொறியாளர்கள் திரு.மகேந்திரபாண்டியன், திரு.முத்தமிழரசு, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.இராஜேந்திரன், வட்டாட்சியர் திரு.பி.சேகர் மற்றும் அரசு அலுவலர்கள், பாசனதாரர் நலச்சங்கத்தினர், கிராம பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**